People's Watch
No.6, Vallabai Road, Chokkikulam, Madurai - 625 002.
Phone: 0452-2531874 & 2539520 Fax: 0452- 2531874
E.mail: info@pwtn.org Web: www.pwtn.org

**21.01.2010**

**மாண்புமிகு. தமிழக முதல்வர் அவர்கள்,**
தமிழ்நாடு அரசு,
தலைமைச் செயலகம்,
சென்னை 600 009.

பேரன்புடையீர்

மக்கள் கண்காணிப்பகத்தின் இனிய வணக்கங்கள்.

மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு மக்கள் கண்காணிப்பகம் அமைப்பு கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக மனித உரிமை செயல்பாட்டுத் தளத்தில் இயங்கி வருகிறது. கடந்த ஆண்டு முதல் சித்ரவதைத் தடுப்பிற்கான தேசியத் திட்டத்தில் இந்தியா முழுவதிலுமுள்ள 10 மாநிலங்களிலும் செயல்பட்டு வருகிறது.

எவ்வித அரசியல் கட்சி சார்புமின்றியும், தனி நபர் மீதான விருப்பு, வெறுப்புக்களைக் கடந்தும், மனித உரிமை அரங்கில் அரசைக் கண்காணித்து மனித உரிமைக் கலாச்சாரத்தை வளர்த்தெடுக்கும் விதமாக எங்களது பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

## இவ்வாரத்தில் நடந்த மனித உரிமை மீறல்கள்

| | | |
|---|---|---|
| 1. | சிறைக் கைதி மரணம் / வன்முறை | |
| 2. | பெண்கள் மீதான வன்முறை | |
| 3. | காவல் நிலையச் சித்திரவதை | |
| 4. | வகுப்பறை வன்முறை | |
| 5. | தலித்துகள் மீதான வன்முறை | |
| 6. | அரசு அதிகாரிகள் / காவல் துறையினர் லஞ்சம் பெற்றது. | |
| 7. | மருத்துவர்கள் அலட்சியம் | |
| 8. | கொத்தடிமை | |
| 9. | பெண் சிசு கொலை | |
| 10. | குழநதை திருமணம் | |
| 11. | குழந்தை தொழிலாளர் மீட்பு | |
| 12. | மீனவர்கள் மீது தாக்குதல் | |
| 13. | கந்து வட்டிக் கொடுமை | |
| 14. | கட்டப்பஞ்சாயத்து / சமூகப் புறக்கணிப்பு | |
| 15. | ரேசன் அரிசி கடத்தல் | |
| 16. | பொதுவானவை | |
| 17. | மொத்தம் | |

தாங்கள் இச்சம்பங்களில் உடனடியாக தலையிட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம்.

நம்பிக்கையுடன் மனித உரிமைப் பணியில்

(ஹென்றி டிபேன்)
நிர்வாக இயக்குநர்

நகல்கள்

1. அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும்
2. அனைத்து மாவட்ட காவல்துறைக் கண்காணிப்பாளர்களுக்கும்
3. அனைத்து அரசியல் கட்சிகளுக்கும்

# தமிழகத்தில் மனித உரிமை மீறல்கள் - தொகுப்பு-02
# 09.01.2010 முதல் 16. 01.2010 முடிய

| வ. எண் | செய்தி கிடைத்த நாள் | மாவட்டம் / பெயர் விபரம் மற்றும் சம்பவ விபரம் | பிரிவு | தகவல் பெற்றது. |
|---|---|---|---|---|
| 49. | 9.1.2010 | **மதுரை மாவட்டம்:** திருமங்கலம் அருகே சிந்துபட்டி ராமன், மகள் ரஞ்சனா(22), அதே ஊரை சேர்ந்த குமார்(28), வீட்டில் இருந்த ரஞ்சனாவை மானபங்கம் செய்ய முயன்றுள்ளார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினத்தந்தி |
| 50. | 9.1.2010 | **திருச்சி மாவட்டம்:** பேட்டவாய்த்தலை அருகில் உள்ள பழங்காவேரியில் வசிப்பவர் சுலேகாபீவி(35), இருவருக்கும் தொடர்பு இருந்தது. ராமசாமியை வீட்டிற்கு வர மறுத்ததால் சுலேகாபீவி மண்ணெண்ணெ ஊற்றி தீ வைத்து கொண்டார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினத்தந்தி |
| 51. | 9.1.2010 | **திருவாரூர் மாவட்டம்:** வலங்கைமான் பேரூராட்சியில் உள்ள கிராமங்களில் தீண்டாமைக் கொடுமைகள் தொடர்ந்து நடப்பதாக CPI (M) கட்சி புகார். | தலித் மீதான வன்முறை | தீக்கதிர் |
| 52. | 9.1.2010 | **சென்னை மாவட்டம்:** போரூர் கிறிஸ்டியான் மகள் ஆனந்தி(22), பட்டா கோரி மனு செய்தபோது சார்பதிவாளர் தரணி ரூ.500/– லஞ்சம் கேட்டதாக புகார். | லஞ்சம் | தினமலர் |
| 53. | 9.1.2010 | **செங்கல்பட்டு மாவட்டம்:** துஞ்சம் கிராமத்தை சேர்ந்தவர் ஆறுமுகம், சர்வேயர் வரதாச்சாரி(55), நிலத்தை அளக்க 2 ஆயிரம் லஞ்சம் கேட்டதாக ஆறுமுகம் லஞ்ச ஒழிப்பு போலீசில் புகார். | லஞ்சம் | தினமலர் |
| 54. | 9.1.2010 | **ராமநாதபுரம் மாவட்டம்:** தொண்டியை சேர்ந்தவர் ஆலங்கீர் பாதுஷா மகள் பானு(5), அதே பகுதியை சேர்ந்த மழுங்குசாகிபு, சிறுமியை மானபங்கம் செய்தார். | பாலியல் வன்முறை | தமிழ்முரசு |
| 55. | 9.1.2010 | **நாமக்கல் மாவட்டம்:** நாமக்கல்லை அடுத்த சின்னமுதலைப்பட்டி நத்தகாட்டு தெருவை சேர்ந்த முருகன் மனைவி மல்லிகா(35), கணவன், மனைவி தகராறில் முருகன் மல்லிகா மீது மண்ணெண்ணெய் ஊற்றி தீ வைத்துள்ளார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்முரசு |
| 56. | 9.1.2010 | **விருதுநகர் மாவட்டம்:** வத்திராயிருப்பு பகுதியை சேர்ந்தவர் நாகூர்(40), வழக்கு தொடர்பாக சிறையில் அடைக்கப்பட்ட நாகூர் மரணம். | சிறைச்சாலை வன்முறை | தமிழ்முரசு |
| 57. | 10.1.2010 | **மதுரை மாவட்டம்:** வாடிப்பட்டியில் உள்ள நுகர்பொருள் வாணிபக்கிடங்கில் இருந்து 14 டன் ரேஷன் அரிசி, சர்க்கரை, பாமாயில், பருப்பு, உள்ளிட்ட குடிமைப் பொருட்கள் கடத்தப்பட்டன. லாரியை அதிகாரிகள் மடக்கினார் | ரேஷன் அரிசி கடத்தல் | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| 58. | 10.1.2010 | **மதுரை மாவட்டம்:** நாமக்கல்லை சேர்ந்தவர் ஜெயக்குமார், மனைவி விஜயலெட்சுமி, எய்ட்ஸ் நோய் இருந்ததால் பிரசவம் பார்க்க டாக்டர்கள் மறுப்பு. விஜயலெட்சுமி புகார். | மருத்துவர் அலட்சியம் | தினகரன் |
| 59. | 10.1.2010 | **விழுப்புரம் மாவட்டம்:** திண்டிவனம் தாலுகாவில் மயிலம் ஒன்றியத்தில் உள்ள ரெட்டனை கிராமத்தில் வெண்ணியம்மன் கோயிலில் தலித் மக்கள் செல்ல அனுமதி மறுக்கப்படுகிறது. | தலித்கள் மீதான வன்முறை | தீக்கதிர் |
| 60. | 10.1.2010 | **தர்மாபுரி மாவட்டம்:** வாகன சோதனையின் போது 12 டன் ரேஷன் அரிசி கடத்தல் லாரியை ஒட்டி வந்த டிரைவர் சண்முகம்(26), கைது. | ரேஷன் அரிசி கடத்தல் | தமிழ்முரசு |
| 61. | 10.1.2010 | **மதுரை மாவட்டம்:** மேலூரில் உள்ள தும்பைப்பட்டியைச் சேர்ந்தவர் செல்வி(34), கணவர் செல்வம்(43), வரதட்சனை கேட்டு கணவர் குடும்பத்தார் கொடுமை படுத்துவதாக போலீசில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்முரசு |
| 62. | 10.1.2010 | **வேலூர் மாவட்டம்:** சேண்பாக்கத்தைச் சேர்ந்த தனசேகர் மகள் திவ்யா(18), வேலை முடிந்து வந்து போது காரில் மர்ம நபர்கள் அவரை கடத்திச் சென்றனர். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்முரசு |
| 63. | 11.1.2010 | **மதுரை மாவட்டம்:** பழங்காநத்தத்தைச் சேர்ந்தஅழகுமீனாள்(40), வலதுகாலில் ஜவ்வு கிழிந்ததால் தனியார் மருத்துவமனையில் ஆப்பரேஷன் செய்தார். வலதுகாலுக்கு பதில் இடது காலில் ஆப்பரேசன் செய்ததாக புகார். | மருத்துவர்கள் அலட்சியம் | தினமலர் |
| 64. | 11.1.2010 | **தஞ்சை மாவட்டம்:** மதுரபாஷானபுரம் கிராமத்தில் ஆதிக்க சாதியினரால் தாக்குதலுக்கு உள்ளான தலித் இளைஞர்கள் மீதே பொய் வழக்கு போட்டுள்ள காவல்துறையினரைக் கண்டித்து மார்க்சிஸ்ட் கட்சியினர் ஆர்ப்பாட்டம். | தலித்துகள் மீதான காவல்நிலைய வன்முறை | தீக்கதிர் |
| 65. | 12.1.2010 | **திண்டுக்கல் மாவட்டம்:** வேடசந்தூர் நெடுஞ்சாலை ரோந்து பிரிவில் எஸ்.ஐ நந்தகோபால், ஏட்டுகள் ரவி, முருகன், ஆகியோர் விபத்தில் காயமடைந்த டிரைவருக்கு முதலுதவி சிகிச்சை செய்ய மறுப்பு. | காவல்நிலைய வன்முறை | தினமலர் |
| 66. | 12.1.2010 | **கடலூர் மாவட்டம்:** விருத்தாசலம் அடுத்த விஜயமாநகரத்தை சேர்ந்தவர் குமரேசன், தனது பெயருக்கு பட்டா மாற்றம் செய்ய சர்வேயர் செல்வராஜ் 1,000 லஞ்சம் கேட்டதாக புகார். | லஞ்சம் | தினமலர் |
| 67. | 12.1.10 | **சிவகங்கை மாவட்டம்:** வலையம்பட்டியை சேர்ந்தவர் ஆரோக்கியம்(43), வீட்டு வேலைக்கு சேசு வீட்டில் மின் இணைப்பை பெற்றார் செயற்பொறியாளர் அந்தோணி மின் இணைப்பைத் துண்டித்ததோடு. திரும்ப கொடுக்க அந்தோணி 4500 லஞ்சம் கேட்டதாக புகார். | லஞ்சம் | தினமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| 68. | 12.1.2010 | **சென்னை மாவட்டம்:** ராமாவரம் குறிஞ்சி நகரை சேர்ந்தவர் நடராஜன் (63), கூட்டுறவு சங்கத்தில் ரூ.3 லட்சம் கடன் கேட்டார். சங்கத்தின் மேனோஜர் ராஜ்குமார்(55) 6ஆயிரம் லஞ்சம் கேட்டதாக புகார். | லஞ்சம் | தினத்தந்தி |
| 69. | 12.1.2010 | **திருவாரூர் மாவட்டம்:** திருவாரூரில் ரயில்வே சீனியர் செக்ஷன் அலுவலராகப் பணியாற்றியவர் சேதுராமன் கீப்பராகப் பணியாற்றி வருபவர் நாகராஜன், நாகராஜுக்கு பதவி உயர்வு கிடைத்துள்ளது. அதற்கு சான்று வழங்க சேதுராமன் ரூ. 2000 லஞ்சம் கேட்டதாக புகார். | லஞ்சம் | தினமணி |
| 70. | 12.1.2010 | **மதுரை மாவட்டம்:** திருப்பரங்குன்றம் அருகே நிலையூரைச் சேர்ந்த சோனைமுத்து மனைவி வினோபா(28), வினோபாவை, மாமனார், மற்றும் அவரது உறவினர்கள் 5 பேர் தாக்கியதாக புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமலர் |
| 71. | 13.1.2010 | **மதுரை மாவட்டம்:** கள்ளிக்குடியை அடுத்த வடக்கம்பட்டியை சேர்ந்தவர் விஜயகுமாரை சிவப்பிரகாஷ் மோசடி செய்ததால் வழக்கை பதிவு செய்வதற்கு இன்ஸ்பெக்டர் இளங்கோவன், ஏட்டு பிரபாகரன் ரூ.1000 லஞ்சம் கேட்டதாக ஐகோர்ட் கிளையில் மனு தாக்கல். | லஞ்சம் | தினத்தந்தி |
| 72. | 13.1.2010 | **மதுரை மாவட்டம்:** மதுரையில் அரிசி ஆலைக்கு கடத்தப்பட்ட ஆயிரம் கிலோ ரேசன் அரிசியை போலீசார் பறிமுதல் செய்தனர். | ரேசன் அரிசி கடத்தல் | தினமலர் |
| 73. | 13.1.2010 | **மதுரை மாவட்டம்:** ஒத்தக்கடை சேர்ந்த வளையாபதி, மகன் அய்யப்பன். வரலாற்று ஆசிரியர் கோல்மட்டையில் தாக்கியதில் அய்யப்பன் படுகாயம் ரூ.10 லட்சம் இழப்பீடு கேட்டு உயர்நீதிமன்ற கிளையில் மனு தாக்கல் | மாணவர்களுக்கு எதிரான வன்முறை | தினமணி |
| 74. | 13.1.2010 | **விருதுநகர் மாவட்டம்:** ராஜபாளையம் நகரின் மலையடிவாரத்தில் இளம் பெண் உடல் பாதி எரிந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டது. போலீசார் விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்சுடர் |
| 75. | 13.1.2010 | **ஈரோடு மாவட்டம்:** கோபி செட்டிபாளையத்தை அடுத்த புள்ளப்பநாயக்கன் பாளையம் ஏமூரில் அருந்ததிய மக்கள் 4 பேர் மீது ஆதிக்க சாதியினர் கொடூரத் தாக்குதல் நடத்தினர். | தலித்துகள் மீதான வன்முறை | தீக்கதிர் |
| 76. | 14.1.2010 | **காஞ்சிபுரம் மாவட்டம்:** ஸ்ரீபெரும்புதூர் பவானி(17), டியூசனுக்கு சென்றவரை மர்ம நபர்கள் கடத்திச் சென்று கற்பழித்து கொலை செய்ததுள்ளனர். | பாலியல் வன்முறை | தினத்தந்தி |
| 77. | 14.1.2010 | **மதுரை மாவட்டம்:** திருப்பரங்குன்றம் பெரியரத வீதியை சேர்ந்த ராம்குமார் (எ) வினோத்குமார் மனைவி சிவலெட்சுமி, வரதட்சணைக் கொடுமையால் தற்கொலைக்கு முயன்றதாக கணவர் உட்பட 5 பேர் மீது புகார் | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினகரன் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| 78. | 14.1.2010 | **சென்னை மாவட்டம்:** சென்னை அம்பத்தூரைச் சேர்ந்தவர் ஜான் கிளமென்ட் (36) வீட்டு பட்டா மறுதல் செய்ய அப்பகுதி சர்வேயர் அருணாச்சலம் ரூ.6,000 லஞ்சம் கேட்டதாக புகார். | லஞ்சம் | தினமலர் |
| 79. | 16.1.2010 | **மதுரை மாவட்டம்:** திருநகர் மகாலெட்சமி மில் காலனி, லால்பகதூர் சாஸ்திரி தெருவை சேர்ந்தவர் ஜெயபாலன் மகள் லெட்சுமி(20), நிச்சயதார்த்தம் முடிந்தநிலையில் ஜெயக்குமார் திருமணத்துக்கு மறுத்துள்ளார். மனமுடைந்த லெட்சுமி விஷம் அருந்தி தற்கொலை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினகரன் |
| 80. | 16.1.2010 | **சிவகங்கை மாவட்டம்:** சிங்கம்புணரியில் தடையை மீறி மஞ்சு விரட்டு நடந்தது. போலீசார்– பொதுமக்கள் இடையே மோதல் ஏற்பட்டது. போலீசார் தடியடி நடத்தி கூட்டத்தை கலைத்தனர். | போலீஸ் தடியடி | தினத்தந்தி |

மக்கள் கண்காணிப்பகம்